சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 21.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,
மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 1868/E/2024**

திரு.R.சதீஸ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
காரிமங்கலம் வட்டம்,
தர்மபுரி மாவட்டம் - 635 111.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 28.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள தகவல்களுக்கு 31.01.2024 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

b) ஆனால் மேற்படி தகவல் தனக்கு கிடைக்கப்பெறவில்லை என மனுதாரர் இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ள 13.02.2024 தேதியிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

c) எனவே, பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் குறிப்பிட்டுக் கோரியுள்ள சர்வே எண் தொடர்பான தகவல்களை, கட்டணம் ஏதுமின்றி, அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன், ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை

**இவ்வாணையத்தில் 20.03.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

d) **மனுதாரர்** மேற்படி தகவலை பெற்றுக் கொண்ட பிறகு அதுகுறித்து ஏதேனும் தெரிவிக்க விரும்பினால், **இவ்வாணையத்திற்கு 31.03.2026-க்குள் கடிதம் அனுப்ப தெரிவிக்கப்பட்டிருந்தது.**

2. மேற்படி உத்தரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் திரு.சுகுமாறன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், காரிமங்கலம் அவர்கள் இவ்வாணையத்தில் 08.03.2026 அன்று நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

3. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 28.01.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலரின் கடித எண் சி.ப.எண்.211/2025, நாள் 02.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தகவலை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இணைத்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. 28.01.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவுப்படி, பெறப்பட்ட தகவல் குறித்து நாளதுவரை மனுதாரரிடமிருந்து கடிதம் ஏதும் இவ்வாணையத்தில் பெறப்படவில்லை.

5. எனவே, 02.02.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA 1868/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரிமங்கலம் வட்டம், தர்மபுரி மாவட்டம் - 635 111.

**மேல்முறையீட்டாளர்**

திரு.R.சதீஸ், த/பெ.ரங்கன் (எ) ரங்கசாமி,
11/191, பாலகோடு மெயின் ரோடு, (மேல்வீதி),
காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம்- 635 111.

Copy to: File MP/PA,